வெள்8PM

தரம் 11
வெள் :9PM
சனி :9PM
ஞாயி :8PM

COMMERCIAL BANK
Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295

BOC
BANKERS TO THE NATION
S.Kishokumar
Nelliyaddy Branch
86479603

PEOPLE'S BANK
S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670

eZ Cash
0766674945

3. முக்கோணி ABC இல் $B\hat{A}C$ இன் இருசமகூறாக்கி AD ஆனது AD = DE ஆகுமாறு E வரை நீட்டப்பட்டுள்ளது.இங்கு D ஆனது BC இன் நடுப்புள்ளி ஆகும்.

i. மேலே உள்ள தரவுகளை வரிப்படமொன்றில் காட்டுக.

காரணம் கூறி பின்வருவனவற்றை நிறுவுக.

ii. ABEC ஓர் இணைகரமாகும்.

iii. AC = CE ஆகும்

iv. ABC ஓர் இருசமபக்க முக்கோணியாகும்.


4. இணைகரம் ABCD இல் D, B ஆகிய உச்சிகளிலிருந்து மூலைவிட்டம் AC க்கு வரையப்பட்ட செங்குத்துகள் DX , BY ஆகும். பின்வருவனவற்றை நிறுவுக.

1. DX = BY எனவும்

2. AY = XC எனவும்

3. BYDX ஓர் இணைகரம் எனவும் நிறுவுக.

5. இணைகரம் ABCD இல் DC இன் நடுப்புள்ளி K ஆகும். AD = DK , BC = CK ஆகும். விடைத்தாளில் உருவைப் பிரதி செய்து,




i. $B\hat{A}D$, AK இனாலும் $A\hat{B}C$, BK இனாலும் இருசமகூறிடப்படுகின்றது எனக் காட்டுக.

ii. $A\hat{K}B = 90^{o}$ எனக் காட்டுக.

iii. AD இற்குச் சமாந்தரமாகவும் AB இல் X இருக்குமாறும் KX ஐ வரைக. ΔAKB இன் பரப்பளவு $= \frac{1}{2}ABCD$ இன் பரப்பளவு எனக் காட்டுக.

6. தரப்பட்டுள்ள உருவில் $B\hat{A}C$ யின் இருகூறாக்கி AP ஆக இருக்கும் அதே வேளை $AC= CP$ ஆகும்.



i. இவ்வுருவை உமது விடைத்தாளில் பிரதிசெய்து தரப்பட்டுள்ள தகவல்களை அதில் சேர்க்க.

ii. AB // CP எனக் காட்டுக.

iii. $P\hat{C}A$ யின் இருகூறாக்கியானது கோடு AP யை Q விலும் கோடு AB யை R இலும் சந்திக்குமெனின், முக்கோணிகள் ACQ வும் PCQ வும் ஒருங்கிசைகின்றனவென நிறுவுக.


iv. QRCQ இணைகரம் எனின், நாற்பக்கல் $ARPC$ ஓர் இணைகரமெனக் காட்டுக.

v. காரணங்கள் தந்து, இணைகரம் $ARPC$ யை அழைப்பதற்கு மிகவும் உகந்த கேத்திரகணிதப் பெயரைக் குறிப்பிடுக.

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

7. இணைகரம் ABCD இல் AD யின் நடுப்புள்ளி E ஆகும். AB = AE ஆகும்.



i. $E\hat{B}A = E\hat{B}C$ என நிறுவுக.

ii. BE $\perp$ EC எனக் காட்டுக.

8. ABCD ஓர் இணைகரம் கோணங்கள் A, B என்பவற்றின் இருசமகூறாக்கிகள் R இல் சந்திக்கின்றன. R இற்கூடாக பக்கங்கள் DA ,BA என்பவற்றிற்கு வரையப்படும் சமாந்தரங்கள் AB, AD என்பவற்றை முறையே P, Q எனும் புள்ளிகளில் சந்திக்கின்றது.


i. AQRP ஓர் இணைகரம் எனக் காட்டுக.

ii. AP = PR எனக் காட்டுக.

iii. AP = PB எனக் காட்டுக.

iv. PQRB ஓர் இணைகரம் எனக் காட்டுக.

9. உருவில் $ABCD$ ஓர் இணைகரம்.பக்கம் BC,AD,TD இன் நடுப்புள்ளிகள் முறையே M,R,P ஆகும். நீட்டப்பட்ட MA ஆனது $MT \perp DT$ ஆகுமாறு புள்ளி T ஐ அமைகிறது.CR ஆனது DT ஐ P இல் சந்திக்கிறது.




i. நாற்பக்கல் $AMCR$ ஓர் இணைகரம் என நிறுவுக

ii. CP இன் பருமன் யாது? காரணம் தருக.

iii. முக்கோணி DCT ஓர் இருசமபக்க முக்கோணி என நிறுவுக

iv. $BA=CT$ என நிறுவுக.

10. முக்கோணி ABC யில் AB = AC யும் BD = CE யும் ஆகும். ஒருங்கிசையும் முக்கோணிச் சோடிகள் இரண்டைக் குறிப்பிடுக.



i. $\Delta ABD \equiv \Delta ACE$ எனக் காட்டுக.






ii. BE = DC எனக் காட்டுக.

iii. $\Delta ABE \equiv \Delta ACD$ எனக் காட்டுக.

18. தொடைகள்















1.	A = {10 இலும் குறைந்த முதன்மை எண்கள் } எனும் தொடையை மூலகங்களாக எழுதுக.
2.	B = {17 இன் காரணிகள் } எனும் தொடையை மூலகங்களாக எழுதுக.
3.	C = {"மகரம" எனும் சொல்லிலுள்ள எழுத்துக்கள் }எனும் தொடையை மூலகங்களாக எழுதுக.

www.lkedu.lk
H.D.Fasmin B.Sc (Hons)

4.	D = {“ 2020 ” எனும் எண்ணிலுள்ள இலக்கங்கள் } எனும் தொடையை மூலகங்களாக எழுதுக.
5.	A = $\{x: x \in$ இரட்டை எண் , $0 < x < 5$ $\}$எனும் தொடையை மூலகங்களாக எழுதுக.
6.	P = $\{x: x \in$ ஒற்றை எண் , $5 < x < 10$ $\}$எனும் தொடையை மூலகங்களாக எழுதுக.
7.	Q = $\{x: x \in$ முதன்மை எண் , $1 < x < 5$ $\}$எனும் தொடையை மூலகங்களாக எழுதுக.
8.	R = $\{x: x \in$ சதுர எண் , $10 \leq x \leq 25$ $\}$எனும் தொடையை மூலகங்களாக எழுதுக.
9.	R = $\{x: x \in$ முக்கோண எண் , $10 \leq x \leq 25$ $\}$எனும் தொடையை மூலகங்களாக எழுதுக.
10.	A = $\{x: x$ ஆனது 6 இன் காரணியாகும் $\}$எனும் தொடையை மூலகங்களாக எழுதுக.
11.	தரப்பட்டுள்ள தொடையை வேறு ஒரு முறையில் குறிப்பிடுக. A = {இரட்டை முதன்மை எண் }
12.	தரப்பட்டுள்ள தொடையை வேறு ஒரு முறையில் குறிப்பிடுக. B = {“கதரகம” எனும் சொல்லிலுள்ள எழுத்துக்கள் }
13.	தரப்பட்டுள்ள தொடையை வேறு ஒரு முறையில் குறிப்பிடுக. 
14.	தரப்பட்டுள்ள தொடையை வேறு ஒரு முறையில் குறிப்பிடுக. 
15.	தரப்பட்டுள்ள தொடையை வேறு ஒரு முறையில் குறிப்பிடுக. 
16.	A∩B எனும் பிரதேசத்தை நிழற்றுக. 
17.	A∪B எனும் பிரதேசத்தை நிழற்றுக. 



H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

18.	$A \cap B'$ எனும் பிரதேசத்தை நிழற்றுக. 	19.	$A' \cap B$ எனும் பிரதேசத்தை நிழற்றுக. 
20.	A' எனும் பிரதேசத்தை நிழற்றுக. 	21.	B' எனும் பிரதேசத்தை நிழற்றுக. 
22.	$(A \cup B)'$ எனும் பிரதேசத்தை நிழற்றுக. 	23.	$A' \cap B'$ எனும் பிரதேசத்தை நிழற்றுக. 
24.	$A \cap B$ எனும் பிரதேசத்தை நிழற்றுக. 	25.	$A \cap B$ எனும் பிரதேசத்தை நிழற்றுக. 
26.	$A \cap B'$ எனும் பிரதேசத்தை நிழற்றுக. 	27.	A' எனும் பிரதேசத்தை நிழற்றுக. 
28.	நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தை தொடைக்குறிப்பீட்டில் எழுதுக. 	29.	நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தை தொடைக்குறிப்பீட்டில் எழுதுக. 
30.	நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தை தொடைக்குறிப்பீட்டில் எழுதுக. 	31.	நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தை தொடைக்குறிப்பீட்டில் எழுதுக. 

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

32.	நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தை தொடைக்குறிப்பீட்டில் எழுதுக  	33.	நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தை தொடைக்குறிப்பீட்டில் எழுதுக. 

34. n(A), n(B), n(A∪B) , n(A∩B) ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பை எழுதுக.

35. n(P), n(BQ), n(P∪Q) , n(P∩Q) ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பை எழுதுக.

36. n(X), n(Y), n(X∪Y) , n(X∩Y) ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பை எழுதுக.

35. n(A) = 35, n(B) = 30, n (A∩B) = 20 ஆயின் n(A∪B) ஐக் காண்க.

36. n(A) = 30, n(B) = 25, n(A∪B) = 35 ஆயின் n(A∩B) இனைக் காண்க.

37. n(A) = 18, n(B) = 17, n (A∩B) = 25 ஆயின் n(A∪B) ஐக் காண்க.


38. n(P) = 15, n(Q) = 12, n (P∩Q) = 27 ஆயின் n(P∪Q) ஐக் காண்க.

39. n(X) = 20, n(X∪Y) = 13 , n (X∩Y) = 12 ஆயின் n(Y) ஐக் காண்க.

40. n(A) = 15, n(A∪B) = 8 , n (A∩B) = 12 ஆயின் n(B) ஐக் காண்க.




41. n(B) = 50, n(A∪B) = 25 , n (A∩B) = 30 ஆயின் n(A) ஐக் காண்க.



42. தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தைப் பயன்படுத்தி கணிதம், தமிழ் ஆகிய இரண்டையும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.



H.D.Fasmin B.Sc (Hons)





www.lkedu.lk

43.	தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தைப் பயன்படுத்தி இறைச்சி, மீன் ஆகிய இரண்டையும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க. 
44.	தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தைப் பயன்படுத்தி இரண்டையும் விரும்பாதவர்களின் எண்ணிக்கையைக் காண்க. 
45.	தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தைப் பயன்படுத்தி இரண்டையும் விரும்பாதவர்களின் எண்ணிக்கையைக் காண்க. 

1.	உருவில் காட்டப்பட்டுள்ள A, B தொடைகள் தொடர்பாக நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தை குறிப்பதாவது. (i) $A \cap B$ (ii) $A' \cap B$ (ıı) $A \cap B'$ (iv) $(A \cap B)'$ 
2.	நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தை தொடைக்குறிப்பீட்டில் எழுதுக. 
3.	$n(A) = 30, n(B) = 25, n(A \cup B) = 35$ ஆயின் $n(A \cap B)$ இனைக் காண்க.
4.	$n(\varepsilon) = 50, n(A) = 35, n(B) = 30, n(A \cap B) = 20$ ஆயின் கீழுள்ளவற்றைக் காண்க. $n(A') =$ ..... $n(A \cup B) =$ .....
5.	P,Q என்பன 2 முட்டற்ற தொடைகள் $P \cup Q = \{3, 5, 7, 9, 11\}$ உம் $P = \{3, 9\}$ உம் ஆகும். தொடை Q வை எழுதுக.

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

6.	$B \subset A$, ஆக இருப்பின் தரப்பட்டுள்ள வென்னுருவில் தொடை B யை குறித்துக் காட்டுக. 
7.	தொடை X , Y என்பவற்றுக்கிடையிலான தொடர்பை தொடைக்குறிப்பீட்டில் காட்டுக. 
8.	$B \subset A$, ஆகவும் $n(A) = 12$ ஆகவும் $n(B) = 7$ இருப்பின் $n(A \cap B')$ ஐக் காண்க.
9.	$A \cap B$ தொடையின் மூலகங்களை எழுதுக. 
10.	அகிலத் தொடை $\varepsilon = \{ 1, 2, 3, 4, \ldots\ldots\ldots\ldots 23, 24 \}$ $A = \{$ 18 இன் காரணிகள் $\}$ $B = \{$ 24 இன் காரணிகள் $\}$ a) தொடை A யின் மூலகங்களை எழுதுக. ..... b) தொடை B யின் மூலகங்களை எழுதுக. ..... c) $A \cup B$ யின் மூலகங்களை எழுதுக. ..... d) $A \cap B$ யின் மூலகங்களை எழுதுக. .....
11.	$\varepsilon = \{ 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 \}$ $A = \{$ 10 இலும் குறைந்த முதன்மை எண்கள் $\}$ $B = \{$ 10 இலும் குறைந்த ஒற்றை எண்கள் $\}$ a) தொடை A யின் மூலகங்களை எழுதுக. ..... b) தொடை B யின் மூலகங்களை எழுதுக. ..... c) $A \cup B$ யின் மூலகங்களை எழுதுக. ..... d) $A \cap B$ யின் மூலகங்களை எழுதுக. ..... e) ε , A, B என்பவற்றை வென்வரிப்படத்தில் வகை குறிக்க. 

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

12. ε = { 1, 2, 3, 4, …….. 14, 15 }
P = {3 இன் மடங்குகள்} ,
Q = {6 இன் மடங்குகள்}

a) P யின் மூலகங்களை எழுதுக. ……..

b) Q யின் மூலகங்களை எழுதுக. ……


c) P∪Q =…… P∩Q =……

d) n(P) = …… n(Q) = …… n(P∪Q) = …… n(P∩Q) = ……..

e) P′= …… Q′ = ……

f) P∩Q′ = ……

g) ε , P, Q என்பவற்றை வென்வரிப்படத்தில் வகை குறிக்க.



13. ε = { 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20 } X = {2 இன் மடங்குகள்} , Y = {4 இன் மடங்குகள்}

a) X யின் மூலகங்களை எழுதுக. ……..

b) Y யின் மூலகங்களை எழுதுக. ……..


c) X∪Y = …… X∩Y = ……

d) n(X) = …… n(Y) = …… n(X∪Y) = …… n(X∩Y) = ……

e) X′= …… Y′ = ……

f) X∩Y′ = ……

g) ε , X, Y என்பவற்றை வென்வரிப்படத்தில் வகை குறிக்க.



H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

14. i. $n(A) = 30, n(B) = 25, n(A \cup B) = 35$ ஆயின் $n(A \cap B)$ இனைக் காண்க.

……

ii. $n(\varepsilon) = 50, n(A) = 35, n(B) = 30, n(A \cap B) = 20$ ஆயின் கீழுள்ளவற்றைக் காண்க.

$n(A`) =$ …… $n(B`) =$……

$n(A \cup B) =$ ……

15. $\varepsilon = \{ 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 \}$

$A = \{ x : x$ 10 இலும் குறைந்த முதன்மை எண்கள்$\}$

$B = \{ x : 1 \leq x \leq 10, x$ ஒற்றை எண்கள்$\}$

1) A, B யின் மூலகங்களை எழுதுக.

A = {……}

B = {……....}

2) ε , A, B ஐ வென்வரிப்படத்தில் குறிக்க.

3) வென்வரிப்படத்தை உபயோகித்து பின்வருவனவற்றிற்கு விடை தருக.

n (A) = …… $n(A \cup B) =$ …… $n(A \cap B) =$ ……


$n(A') =$ …… $n(B') =$ …… $n(A \cup B)' =$ ……

16. வகுப்பொன்றிலுள்ள 40 மாணவர்களில் 20 மாணவர்கள் கணிதத்தினையும் 30 மாணவர்கள் தமிழினையும் விரும்புகின்றனர். 10 மாணவர்கள் இவ்விரண்டையும் விரும்புகின்றனர். இத்தகவல்களை வென்னுருவொன்றில் குறித்து கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

i. கணிதம் மட்டும் விரும்புவோர் ……

ii. தமிழ் மட்டும் விரும்புவோர் ……

iii. இவ்விரண்டையும் விரும்பாதோர். ……




17. கழகமொன்றிலுள்ள 50 மாணவர்களில் 28 மாணவர்கள் கிரிக்கட்டையும் 25 மாணவர்கள் காற்பந்தினையும் விளையாடுகின்றனர். 7 மாணவர்கள் இவ்விரண்டையும் விரும்புகின்றனர். இத்தகவல்களை வென்னுருவொன்றில் குறித்து கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

i. கிரிக்கட் மட்டும் விளையாடுவோர் ……

ii. காற்பந்து மட்டும் விளையாடுவோர் ……

iii. இவ்விரண்டையும் விளையாடதோர் ……




H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

18. ஒரு வகுப்பிலுள்ள 40 மாணவர்களில் 21 பேர் வானொலி கேட்க விரும்பாதவர்கள். 10 பேர் தொலைக்காட்சி பார்க்க விரும்பாதவர்கள் 8 பேர் மேற்குறித்த இரண்டு வகைகளையும் விரும்பாதவர்கள்.


i. மேலேயுள்ள தகவல்களைப் பொருத்தமான ஒரு வென்வரிப்படத்தில் குறித்துக் காட்டுக.



ii. மேற்குறித்த இரண்டு வகைகளையும் விரும்புவோரின் எண்ணிக்கை யாது? .....

iii. தொலைக்காட்சியை மட்டும் பார்க்க விரும்புவோரின் எண்ணிக்கை யாது? .....

19. ஒரு விருந்தில் கலந்துகொண்ட 30பேரில் 12 பேர் வடையும் 20 பேர் கேக்கும் உண்டனர். 5 பேர் இரண்டு வகைகளையும் உண்ணவில்லை. மேற்குறித்த தகவல்களை பொருத்தமான வென்னுருவில் குறிக்க.




i. மேற்குறித்த இரண்டு வகைகளையும் உண்டவர்களின் எண்ணிக்கையைக் காண்க.

ii. ஏதாவது ஒரு வகையை மட்டும் உண்டவர்களின் எண்ணிக்கையைக் காண்க.....

20. குறித்த ஓர் வீதியிலுள்ள 200 குடும்பங்களில் 150 குடும்பத்தினர் வீரகேசரியும் 100 குடும்பத்தினர் தினக்குரலையும் வாசிக்கின்றனர். இரண்டையும் வாசிப்போரின் எண்ணிக்கை எனக்கொண்டு அனைவரும் ஏதாவது ஒரு பத்திரிகையை வாசிக்கின்றனர் எனக்கொண்டு

i. இத்தகவல்களை வென்னுருவில் குறித்துக் காட்டுக.



ii. இன் பெறுமானத்தைக் காண்க. .....

iii. வீரகேசரி மாத்திரம் வாசிப்போர் எத்தனை பேர் ? .....




iv. தினக்குரல் மாத்திரம் வாசிப்போர் எத்தனை பேர் ? .....

v. வீரகேசரி அல்லது தினக்குரல் மட்டும் வாசிப்போரின் எண்ணிக்கையைக் காண்க.

.....

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

21.	புதுவருட விளையாட்டு போட்டியொன்றில் கலந்து கொண்ட 35 பிள்ளைகளில் 19 பேர் ஆண்பிள்ளைகளாவர். 17 பேர் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் 15 வயதுக்குக் குறைந்த பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை 6 ஆகும். i. மேலேயுள்ள தகவல்களை ஒரு வென்வரிப்படத்தில் குறித்துக் காட்டுக.  ii. 15 வயதிற்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?..... iii. 15 வயதிற்கு குறைந்த ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? ..... iv. பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது ....
22.	வகுப்பொன்றிலுள்ள 31 சிறுவர் மேசைகள் உள்ளன. அவற்றுள் 15 இற்கு பச்சை நிறம் பூசப்பட்டுள்ளது. பச்சை நிறம் பூசப்பட்ட மொத்த சிறுவர் மேசைகளினதும் கதிரைகளினதும் எண்ணிக்கை 32 ஆகும். 18 கதிரைகளுக்கு நீல நிறம் பூசப்பட்டுள்ளது. a) மேலுள்ள தரவுகளை வென்னுருவில் குறித்துக் காட்டுக.  b) நீல நிறம் பூசப்பட்ட மேசைகளின் எண்ணிக்கை யாது? ..... c) பச்சை நிறம் பூசப்பட்ட கதிரைகளின் எண்ணிக்கை யாது? ..... d) நீல நிறம் பூசப்பட்ட மொத்த மேசைகளினதும் கதிரைகளினதும் எண்ணிக்கையைக் காண்க. ..... e) வகுப்பறையில் காணப்பட்ட கதிரைகளினதும் மேசைகளினதும் மொத்த எண்ணிக்கை யாது? .....
23.	40 மாணவர்களைக் கொண்ட வகுப்பொன்றில் 28 மாணவர்கள் கிரிக்கட் விளையாடுகின்றனர். அவர்களுள் 15 பேர் காற்பந்து விளையாடுகின்றனர். a) இத்தரவுகளை வென்வரிப்படமொன்றில் குறித்துக் காட்டுக. 

H.D.Fasmin B.Sc (Hons)


www.lkedu.lk

b) கிரிக்கட் மாத்திரம் விளையாட விருப்பமுள்ளவர்கள் எத்தனை பேர் ?.....

c) எந்தவொரு விளையாட்டையும் விளையாடாதவர்கள் எத்தனை பேர் ?.....

d) கிரிக்கட் (C) , காற்பந்து (F) ஆகிய இரு விளையாட்டுக்களுக்கும் இடையிலான தொடர்பை தொடைக் குறிப்பீட்டில் எழுதிக் காட்டுக.....

24. நிறுவனமொன்றின் ஆட்சேர்ப்புக்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையொன்றில் மொழி நுண்ணறிவு ஆகிய பாடங்களில் சித்தி பெற்றோரின் எண்ணிக்கை பற்றிய தகவல் இங்கு வென்வரிப்படத்தில் தரப்பட்டுள்ளது.



i. நுண்ணறிவு மாத்திரம் சித்தி அடைந்தோர் எத்தனை பேர்?


ii. நுண்ணறிவு சித்தி அடைந்தோர் 38 பேர் எனின், மேற்குறிப்பிட்ட இரு பாடங்களிலும் சித்தி அடைந்தோர் எத்தனை பேர்?

iii. பரீட்சைக்குத் தோற்றியோரின் எண்ணிக்கை 70 பேர் எனவும், இவர்கள் அனைவரும் மேற்குறிப்பிட்ட இரு பாடங்களுக்கும் தோற்றினர் எனவும் கருதி மொழி மாத்திரம் சித்தி அடைந்தோரின் எண்ணிக்கையைக் காண்க.

iv. மேற்குறிப்பிட்ட இரு பாடங்களிலும் சித்தி அடைந்தோரின் எண்ணிக்கையைக் குறிக்கும் பிரதேசத்தை இங்கு தரப்பட்டுள்ள வென்னுருவில் நிழற்றிக் காட்டுக.


v. பரீட்சைக்குத் தோற்றியோரில் மேற் குறிப்பிட்ட இரு பாடங்களிலும் சித்தி அடைந்தோர் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர் எனின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படடோரின் எண்ணிக்கையானது பரீட்சைக்குத் தோற்றியோரின் எண்ணிக்கையின் என்ன சதவீதமாகும்?

25. மருத்துவப் பரிசோனையொன்றிற்கு வந்திருந்த 130 நோயாளிகளுள் 75 பேர் நீரிழிவு நோயாளிகளாகும். இந் நோயாளிகளில் 52 பேர் மாரடைப்பினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் யாவரும் நீரிழிவு நோயினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர்.



i. மாரடைப்பால் பாதிக்கப்படாத நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை யாது?

www.lkedu.lk

	ii. மாரடைப்பு நோயாளிகளுக்கான தொடையை வென்னுருவில் உட்படுத்திப் பெயரிடுக. iii. மேலுள்ள தகவல்களை வென்னுருவில் குறித்து பூரணப்படுத்துக. iv. இந்நோயாளர்களுள் எழுமாறாகத் தெரியப்படும் ஒருவர் நீரிழிவு அல்லது மாரடைப்பால் பாதிக்கப்படாதவராக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.
26.	ஆய்வு ஒன்றிற்கு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தம் வீட்டுபாதை ஒன்றில் ஓர் மணித்தியாலத்தில் செல்லும் வாகனம் தொடர்பாக மயூரன் பெற்ற தரவுகள் பின்வருமாறு. ஒரு மணித்தியாலத்தில் பாதையில் சென்ற மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 60 அவற்றில் 28 வேன்களாவதோடு வெள்ளை நிற வாகனங்களின் எண்ணிக்கை 25 ஆகும். வேன் அல்லாத வெள்ளை நிற வாகனங்கள் 15 ஆகும். 1. மேற்குறித்த தரவுகளை கீழ்காணும் வெண்உருவில் குறித்துக் காட்டுக.  2. குறித்த நேரத்தில் பயணம் செய்த வெள்ளை நிறமற்ற வேன்களின் எண்ணிக்கையைக் காண்க. 3. $(A \cup B)'$ குறிக்கும் பிரதெசத்தை வெண்உருவில் நிழற்றி அவை குறிக்கும் பகுதிகளை சொற்களில் விபரிக்க.
	19, 20 மடக்கை I & II
1.	$3^4 = 81$ என்பதை மடக்கை வடிவில் தருக.
2.	$\log_2 8 = 3$ என்பதை சுட்டி வடிவில் தருக.
3.	$\log_a b = 3$ என்ற கோவையில் a, b யிற்கு பொருத்தமான பெறுமானச் சோடிகள் இரண்டை எழுதுக.
4.	சுருக்கி விடையை நேர்ச்சுட்டியில் தருக. $(y^2)^3 \times 6y^{-2}$
5.	$4^x = 64$ எனின் x இன் பெறுமானத்தைக் காண்க.





H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

6.	$lg^{25} - lg^{2} + lg^{8}$ மடக்கை அட்டவணையை பயன்படுத்தாமல் தரப்பட்டுள்ள கோவையின் பெறுமானம் காண்க.
7.	$\log_a \sqrt{x} + \log_a 2 = \log_a 6$ எனின் x இன் பெறுமானத்தைக் காண்க.
8.	$\log_a 8 - \log_a 4 = \log_a x$ ஐத் தீர்க்க.
9.	$\log_a 16 - \log_a 8 + \log_a 25 = \log_a x$ ஐத் தீர்க்க.
10.	மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க. $\frac{7.3 \times 564}{24.76}$
11.	மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க. $\frac{5.432 \times 878.2}{83.8}$
12.	மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க. $\frac{73.1 \times 25.4}{12.32}$
13.	மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க. 232.5×12.4
14.	மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க. $\frac{6.914 \times 3.076}{8.619}$
	21. வரைபு
1.	படித்திறன் 2 ஆகவும் வெட்டுத்துண்டு -1 ஆகவமுள்ள நேர்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.
2.	$y = 3x + 1$எனும் நேர்கோட்டிற்குச் சமாந்தரமாகவும் வெட்டுத்துண்டு 3 ஆகவும் உள்ள நேர்கோட்டின் சமன்பாடு யாது?
3.	$y = 3x + 1$எனும் நேர்கோட்டிற்குச் சமாந்தரமாகவும் உற்பத்தியினூடும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது?
4.	$y = 2x + 1$எனும் நேர்கோட்டிற்குச் சமாந்தரமாகவும் $(0, -3)$ இனூடும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது?

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

5.	(2 , 1) , (4 , 7) எனும் புள்ளிகளினூடாகச் செல்லும் நேர்கோட்டின் படித்திறன் யாது?
6.	வரைபில் காட்டப்பட்டுள்ள நேர்கோட்டின் படித்திறனைக் காண்க. 
7.	வரைபில் காட்டப்பட்டுள்ள நேர்கோட்டின் படித்திறனைக் காண்க. 
8.	உருவில் காணப்படுகின்றவாறு P, Q என்னும் புள்ளிகளினூடகச் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டை வடிவம் y = mx + c யில் எழுதினால், அப்போது i. m இன் பெறுமானத்தையும் ii. c யின் பெறுமானத்தையும் எழுதுக. 
9.	சமன்பாடு $3x$ + y – 5 = 0 இனால் தரப்படும் நேர்கோட்டின் படித்திறனைக் காண்க.
10.	$y = x^2 - 3$ எனும் சார்பின் திரும்பற்புள்ளியின் ஆள்கூற்றை எழுதுக.
11.	$y = x^2 + 2$ எனும் சார்பின் வரைபை வரைவதற்கான பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அட்டவணையிலுள்ள இடைவெளியை நிரப்புக. x: -3, -2, -1, 0, 1, 2, 3 y: 11, 6, ….., 2, 3, ….., 11
12.	உருவில் தரப்பட்டுள்ள சார்பின் வரைபு y அச்சு வழியே மேல்நோக்கி 2 அலகு நகர்த்தப்பட்டால் புதிய வரைபின் சமன்பாட்டைக் காண்க. 
13.	$y = 2x^2 + 5$ எனும் சார்பின் வரைபு y அச்சு வழியே கீழ் நோக்கி 2 அலகு நகர்த்தப்பட்டால் புதிய வரைபின் சமன்பாட்டைக் காண்க.

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

கட்டுரை வினாக்கள்

14. $y = -x^2 + 4$ எனும் சார்பின் வரைபை வரைவதற்கான x, y பெறுமானங்கள் கொண்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

x	-3	-2	-1	0	1	2	3
y	-5	0	3	4	3	……	-5

i. $x = 2$ ஆகும் போது y இன் பெறுமானத்தைக் காண்க.
ii. x, y அச்சுக்களில் 10 சிறு பிரிவுகளை ஒரு அலகாகக் கொண்டு மேற்கூறிய சார்பின் வரைபை வரைக.
iii. வரைபின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.
iv. சார்பின் திரும்பற்புள்ளியின் ஆள்கூறை எழுதுக.
v. சார்பு நேராக அதிகரிக்கும் x இன் பெறுமான ஆயிடையை எழுதுக.
vi. $x^2 - 4 = 0$ இன் மூலங்களைக் காண்க.

15. $y = x^2 - 4$ எனும் சார்பின் வரைபை வரைவதற்கான x, y பெறுமானங்கள் கொண்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

x	-3	-2	-1	0	1	2	3
y	5	0	-3	……	-3	0	5

i. $x = 0$ ஆகும் போது y இன் பெறுமானத்தைக் காண்க.
ii. x, y அச்சுக்களில் 10 சிறு பிரிவுகளை ஒரு அலகாகக் கொண்டு மேற்கூறிய சார்பின் வரைபை வரைக.
iii. வரைபின் இழிவுப்பெறுமானத்தைக் காண்க..
iv. சார்பின் திரும்பற்புள்ளியின் ஆள்கூறை எழுதுக.
v. சார்பு y அச்சு வழியே 2 அலகுகள் மேல் நோக்கி நகரும் போது பெறப்படும் புதிய சார்பின் சமன்பாட்டைக் காண்க.
vi. $x^2 - 4 = 0$ இன் மூலங்களைக் காண்க.

16. $y = 3 - 2x^2$ எனும் சார்பின் வரைபை வரைவதற்கான x, y பெறுமானங்கள் கொண்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

x	-2	-1	0	1	2
y	……	1	3	1	-5

i. வெற்றிடங்களை நிரப்புக.
ii. x, y அச்சுக்களில் 10 சிறு பிரிவுகளை ஒரு அலகாகக் கொண்டு மேற்கூறிய சார்பின் வரைபை வரைக.
iii. உயர்வுப் பெறுமானம் யாது?
iv. வரைபின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.
v. சார்பின் திரும்பற்புள்ளியின் ஆள்கூறை எழுதுக.
vi. சார்பு நேராக அதிகரிக்கும் x இன் பெறுமான ஆயிடையை எழுதுக.
vii. $3 - 2x^2 = 0$ இன் மூலங்களைக் காண்க.
viii. இவ்வரைபு y அச்சு வழியே நிலைக்குத்தாக 2 அலகுகள் மேல் நோக்கி நகரும் போது பெறப்படும் வரைபின் சமன்பாட்டைக் காண்க.

17. $y = 2x^2 - 9$ எனும் சார்பின் வரைபை வரைவதற்கான x, y பெறுமானங்கள் கொண்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

x	-3	-2	-1	0	1	2	3
y	9	……	-7	……	-7	-1	9

i. அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.
ii. பொருத்தமான அளவிடையில் சார்பின் வரைபை வரைக.
iii. வரைபின் இழிவுப்பெறுமானத்தைக் காண்க.
iv. சமச்சீர் அச்சின் சமன்பாட்டைக் காண்க.
v. சார்பு நேராகக் குறையும் x இன் பெறுமான வீச்சை எழுதுக.

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

18. $y = x^2 - 3$ எனும் சார்பின் வரைபை வரைவதற்கான x, y பெறுமானங்கள் கொண்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

x	-3	-2	-1	0	1	2	3
y	6	1	……	-3	-2	1	6

i. $x = -1$ ஆகும் போது y இன் பெறுமானத்தைக் காண்க.
ii. x, y அச்சுக்களில் 10 சிறு பிரிவுகளை ஒரு அலகாகக் கொண்டு மேற்கூறிய சார்பின் வரைபை வரைக.
iii. வரைபின் இழிவுப்பெறுமானத்தைக் காண்க..
iv. சார்பின் திரும்பற்புள்ளியின் ஆள்கூறை எழுதுக.
v. $x^2 - 3 = 0$ இன் மூலங்களைக் காண்க.

22. வீதம்

1. குறித்ததொரு கதியில் பயணம் செய்யும் ஒரு மோட்டார் வண்டி 12 நிமிடங்களில் 14km தூரம் பயணம் செய்திருப்பின் அதன் மணிக்கதியை km இல் காண்க.

2. சீரான கதியுடன் நீர் பாயும் குழாய் ஒன்றிலிருந்து 10 செக்கனில் 40 லீற்றர் நீர் வெளியேறுகின்றது. குழாயிலிருந்து நீர் பாயும் கதி லீற்றர்/நிமிடத்தில் யாது?

3. ஒரு குழாயினூடாக 5 நிமிடத்தில் 240ℓ நீர் வெளியேறுகின்றது. நீர் பாயும் வீதத்தைச் செக்கனுக்கு எத்தனை லீற்றர் எனக் காண்க.

4. ஒரு தொட்டிக்கு நீர் 500 மில்லிலீற்றர் நிமிடம் என்னும் வீதத்தில் பம்பப்படுகின்றது. ஒரு மணித்தியாலத்தில் தொட்டியில் சேரும் நீரின் கனவளவு எத்தனை லீற்றர்?

5. நிமிடத்திற்கு 4 லீற்றர் வீதம் நிரம்பும் குழாயொன்றினால் 360 லீற்றர் கொள்ளளவுடைய தாங்கியொன்றை நிரப்புவதற்கு எடுக்கும் காலத்தை மணித்தியாலத்தில் காண்க.

6. கனவுரு வடிவான நீர்த்தாங்கியொன்றின் உட்பகுதியின் நீள, அகல, உயரங்கள் முறையே 5m,4m,3m ஆகும்.

i. தாங்கியின் கொள்ளளவை லீற்றரில் காண்க.
ii. இந்நீர்த்தாங்கி நிமிடத்துக்கு 350l எனும் வீதத்தில் நிர் வழங்கப்படும் அதேவேளை தாங்கியிலிருந்து மற்றொரு தாங்கிக்கு நிமிடத்துக்கு 300l எனும் வீதத்தில் நீர் கடத்தப்படுகிறது. ஆரம்பத்தில் முதலாவது தாங்கி வெறுமையாகவுள்ள போது இவ்விரு குழாய்களும் ஒன்றாக திறக்கப்படின் தாங்கி முற்றாக நிரம்ப எடுக்கும் நேரத்தைக் காண்க.
iii. தாங்கி நிரம்ப ஆரம்பித்து 45 நிமிடங்களின் பின்னர் தாங்கியில் எவ்வளவு உயரத்திற்கு நீர் நிரம்பியிருக்கும் எனக் காண்க.


7. நீரை விநியோகிக்கும் நிலையமொன்றில் அமைக்கப்பட்டுய்ய கனவுரு வடிவ நீர்த்தாங்கியின் நீள, அகல, உயரங்கள் முறையே 3m,1.5m,1.5m ஆகும்.

i. நீர்த்தாங்கியின் கொள்ளளவை லீற்றரில் காண்க.
ii. கனவளவை லீற்றரில் காண்க.
iii. 150 லீற்றர் /நிமிடம் எனும் சீரான கதியில் நீர் பாயும் இரு குழாய்களினால் தாங்கி முற்றாக நிரப்பப்படுகின்றது. எனின் தாங்கியை முற்றாக நீரால் நிரப்ப எடுக்கும் காலத்தைக் காண்க.

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

8.	A, B ஆனது நேர்வீதி ஒன்றில் 175km இடைத்தூரம் கொண்ட இரு நகரங்களாகும் A யிலிருந்து $50kmh^{-1}$சீரான கதியில் லொறி ஒன்று B நகரத்திலிருந்து பயணம் செய்வதுடன் அதற்கு பின் A யிலிருந்து $75kmh^{-1}$ சீரான கதியில் வேன் ஒன்று B நகரத்தை நோக்கி புறப்பட்டது. வேன் வண்டி லொறியை முந்திச் செல்லும் போது லொறி A இலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கும்.?
9.	அடியின் பரப்பளவு $2m^2$ உடைய கனவுரு வடிவான நீர்தாங்கியில் $2l$ நீர் நிரம்பியுள்ள வேளை நிமிடத்திற்கு $40l$ நீர் வெளியேற்றும் குழாயினூடாக நீர்த்தாங்கியை முற்றாக நிரப்ப 20 நிமிடம் எடுக்கும் எனின், தாங்கியின் உயரத்தை cm இல் காண்க.
10.	நகரங்களுக்கிடையில் பிரயாணம் செய்யும் புகையிரதம் ஒன்றின் தூர-நேர வரைபு காட்டப்பட்டுள்ளது. i. புகையிரதம் பயணம் செய்த முழுத்தூரத்தைக் காண்க. ii. பிரயாணத்தை நிறைவு செய்வதற்கு எடுத்த காலத்தைக் காண்க. iii. புகையிரதம் AB, BC, CD ஆகிய நகரங்களுக்கிடையே பிரயாணம் செய்த வேகங்களை kmh^{-1} இல் தனித்தனியே காண்க. iv. புகைவண்டியின் சராசரிக் கதியைக் காண்க.





23. சூத்திரங்கள்

1.	சூத்திரம் $2hR - h^2 = a^2$ இல் a^2 ஐ எழுவாயாக்குக.
2.	சூத்திரம் $v^2 = u^2 + 2as$ இல் s ஐ எழுவாயாக்குக.
3.	சூத்திரம் $T = a + (n-1)d$ யில் n ஐ எழுவாயாக்குக.
4.	சூத்திரம் $v = u - at$ யில் a யை எழுவாயாக்குக.

www.lkedu.lk

5.	பரனைற்று (F) மூலம் காட்டப்படும் வெப்பநிலையை செல்சியஸ் (C) ஆக மாற்றுவதற்குச் சூத்திரம் $C = \frac{5}{9}(F - 32)$ பயன்படுத்தப்படுகின்றது. இச் சூத்திரத்தில் F ஐ எழுவாயாக்குக.
6.	சமன்பாடு $ax + 3y = c$ யில் y யை எழுவாயாக்குக.
7.	சூத்திரம் $pq - r = u$ இல் p ஐ எழுவாயாக்குக.

24. சமனிலிகள்

1.	$5x - 1 \leq 9$ எனும் சமனிலியின் நேர் முழு எண் தீர்வுகளை எழுதுக.
2.	$3x + 1 > 7$ எனும் சமனிலியைத் தீர்த்து தீர்வைக் கீழுள்ள எண்கோட்டின் மீது குறித்துக் காட்டுக. 
3.	$2x - 3 > x + 1$ என்ற சமனிலியைத் தீர்க்க.
4.	$-3x > 6$ எனும் சமனிலியைத் தீர்த்து தீர்வைக் கீழுள்ள எண்கோட்டின் மீது குறித்துக் காட்டுக. 

25. கூட்டல் விருத்தி

1.	கூட்டல் விருத்தியொன்றின் n ஆம் உறுப்பு $5n - 1$ ஆகும். அவ்விருத்தியின் 59 எத்தனையாம் உறுப்பாகும்.
2.	முதலாம் உறுப்பு 3 ஆகவும் பொது வித்தியாசம் 2 ஆகவும் உள்ள கூட்டல் விருத்தியின் n ஆம் உறுப்பு $2n + 1$ எனக் காட்டுக.
3.	கடையொன்றில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள சவர்க்காரங்களில் முதலாம் நிரையில் 25 சவர்க்கராங்களும் அதற்கு மேலே உள்ள ஒவ்வொரு நிரையிலும் அதற்கு கீழுள்ள நிரையிலும் 3 குறைவாக அமையுமாறு அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. இறுதி நிரையில் 1 சவர்க்காரம் மாத்திரம் காணப்படுகின்றது. எனின் சவர்க்கார நிரைகளின் எண்ணிக்கை யாது?
4.	கூட்டல் விருத்தியொன்றில் a = 5 , T_9 = 21 ஆயின் பொது வித்தியாசத்தைக் காண்க.

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

5.	5, 8, 11, 14, … எனும் கூட்டல் விருத்தியின் 10ஆம் உறுப்பு 32 ஆயின் முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
6.	முதல் 10 மூன்றின் மடங்குகளினது கூட்டுத் தொகை யாது?
7.	முதல் 20 இரண்டின் மடங்குகளது கூட்டுத்தொகை யாது?
8.	1 இற்கும் 100 இற்கும் இடைப்பட்ட ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?
9.	1 தொடக்கம் 50 வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது?
10.	முதலாம் உறுப்பு 3 ஆகவுள்ள கூட்டல் விருத்தியொன்றின் 2ஆம், 3ஆம் உறுப்புக்களின் கூட்டுத்தொகை 18 ஆகும் எனின் பொது வித்தியாசம் யாது?
11.	x , $x + 2$, $x + 4$ என்றவாறு அமையும் கூட்டல் விருத்தியின், a. பொது வித்தியாசம் யாது ? b. 12 ஆம் உறுப்பை x சார்பாகத் தருக.
	கட்டுரை வினாக்கள்
12.	கூட்டல் விருத்தியொன்றின் முதல் இரு உறுப்புக்களின் கூட்டுத்தொகை 14 உம் மூன்றாம் உறுப்பு 13 உம் ஆகும். i. பொது வித்தியாசம், முதலுறுப்பு ஆகியவற்றைக் காண்க. ii. முதல் 21 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
13.	கூட்டல் விருத்தியொன்றின் n ஆம் உறுப்பு $T_n = 100 - 3n$ஆகும். i. தொடரின் முதல் 3 உறுப்புக்களையும் ஒழுங்கு முறைப்படி எழுதுக. ii. முதல் 20 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க. iii. 729, 243 , 81 , … எனும் தொடரின் முதல் 6 உறுப்புக்களின் கூட்டுத்தொகையை சூத்திரத்தை பயன்படுத்திக் காண்க.
14.	ரூபா 51000 பெறுமதியான குளிர்சாதனப் பெட்டியை கொள்வனவு செய்வதற்கு குமார் மற்றும் கீதா பணத்தை சேமிக்க ஆரம்பித்தனர். குமார் ஒவ்வொரு வாரமும் ரூபா 500, ரூபா 600, ரூபா 700….. என்ற ஒழுங்கில் பணத்தை வங்கியில் வைப்புச் செய்தான். கீதா ரூபா 100, ரூபா 200, ரூபா 300 என்ற ஒழுங்கில் மாதத்திற்கு ஒருமுறை வங்கியில் பணத்தை வைப்புச் செய்தால்.

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

	i. தொடர்கள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி குமார் 28 வாரங்களில் தேவையான பணத்திலும் பார்க்க ரூபா 800 அதிகமாக வங்கியில் வைப்புச் செய்துள்ளான் எனக் காட்டுக. ii. கீதாவிற்கு தேவையான பணத்திலும் பார்க்க ரூபா 100 அதிகமான பணத்தை 9 மாதங்களிற்கு வைப்பிலிடுவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம் எனக் காட்டுக.
15.	80, 74, 68, 62, …. எனும் கூட்டல் விருத்தியின் i. 11ஆம் உறுப்பைக் காண்க. ii. முதல் 11 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க. iii. மேற்படி கூட்டுத்தொகையைப் பயன்படுத்தி 82, 76, 70, 64,…. எனும் தொடரின் முதல் 11 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
16.	வீடொன்றின் முன் பகுதியில் வட்டவடிவில் அமைக்கப்பட்டுள்ள ஒரு நிலப்பகுதியில். முதல் வட்டச் சுற்றில் 7 சீமெந்துக் கற்களும் இரண்டாம் வட்டச் சுற்றில் 11 உம் மூன்றாம் வட்டச் சுற்றில் 15 உம் என்றவாறு சீமெந்துக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. முதலாம் வட்டத்திலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள கற்களின் எண்ணிக்கைகளை முறையே எடுக்கும் போது அவை கூட்டல் விருத்தியில் உள்ளன. i. 10 ஆம் வட்டத்தில் உள்ள கற்களின் எண்ணிக்கை யாது? ii. முதல் ***n*** வட்டங்களில் உள்ள கற்களின் மொத்த எண்ணிக்கை ***Sn*** எனின், ***Sn = n(2n+5)*** எனக் காட்டுக iii. அலங்காரம் 15 வட்டங்களைக் கொண்டுள்ளதெனின், அலங்காரத்தில் உள்ள கற்களின் மொத்த எண்ணிக்கையைக் காண்க. iv. ஒரு கல் பதிப்பதற்கு ரூபா 10 செலவாகின்றது எனின் இவ்வாறு 15 வட்டச் சுற்றிற்கும் கற்கள் பதிப்பதற்கான செலவு ரூபா 5000 இலும் அதிகமாகும் எனக் காட்டுக.
17.	ஒரு வியாபாரி தனது கடையில் சவர்க்காரக்கட்டிகளை அடுக்கும் போது முதலாவது நிரையில் 25 சவர்க்காரக்கட்டிகளும் அதற்கு மேலுள்ள நிரையில் அதற்கு கீழுள்ள நிரையிலும் பார்க்க 3 குறைவாக இருக்குமாறு அடுக்கி வைத்தார். இறுதி நிரையில் ஒரு சவர்க்காரம் மாத்திரம் காணப்பட்டன. i. முதலாம், இரண்டாம், மூன்றாம் நிரைகளிலுள்ள சவர்க்கார கட்டிகளின் எண்ணிக்கையை ஒழுங்கு முறைப்படி எழுதி, அது எவ்வகையான விருத்தி எனக்கூறுக. ii. இங்கு காணப்படும் சவர்க்கார கட்டிகளின் நிரைகளின் எண்ணிக்கை யாது? iii. எத்தனையாவது நிரையில் 10 சவர்க்காரக்கட்டிகள் காணப்படும்? iv. இங்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ள **மொத்த** சவர்க்காரக் கட்டிகள் எத்தனை ?

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk


18.	a. கூட்டல் விருத்தி ஒன்றின் n ஆவது உறுப்பு $5n - 3$ ஆகும். i. விருத்தியின் முதல் மூன்று உறுப்புக்களையும் எழுதுக. ii. இவ்விருத்தியின் 10ஆவது உறுப்பைக் காண்க. iii. 57 இவ்விருத்தியின் எத்தனையாவது உறுப்பு ஆகும். iv. இவ்விருத்தியின் முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
19.	11ஆம் தரத்தில் கல்வி கற்கும் ரவி அருகே தரப்பட்டுள்ள சைக்கிளை க.பொ.த (சா/த) பரீட்சைக்குப் பின் வாங்குவதற்கு ஜனவரி ஆரம்பத்தில் ரூ 250 உம். பெப்ரவரி மாத ஆரம்பத்தில் ரூ 380 உம் மார்ச் மாத ஆரம்பத்தில் ரூ 510 என்றவாறு ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் டிசம்பர் மாதம் வரை பணத்தைச் சேமித்து வைத்தான்.  i. ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் ரவி சேமித்த தொகை யாது? ii. டிசம்பர் மாதம் வரை ரவியால் சேமிக்க முடிந்த தொகை எவ்வளவு? iii. சேமித்த பணத்தை எடுத்துக் கொண்டு ரவி சைக்கிளை வாங்குவதற்குக் கடைக்குச் சென்ற போது உடன் காசுக்கு 16% கழிவு வழங்கப்படும் எனும் அறிவித்தலைக் கண்டான். ரவியால் சைக்கிளை வாங்க முடிந்ததா காரணம் தருக.
20.	ஓர் ஏந்தானத்தில் சவர்க்காரங்கள் ஆகவும் கீழே உள்ள நிரையில் 28, அடுத்த நிரையில் 25, அடுத்த நிரையில் 22 என்னும் கோலத்திற்கேற்ப வைக்கப்பட்டுள்ளன. i. ஏந்தனத்தில் சவர்க்காரம் வைக்கப்பட்டுள்ள எண் விருத்தியின் முதல் மூன்று உறுப்புகளை எழுதி, அது எவ்வகை விருத்தியெனக் குறிப்பிடுக. ii. இவ்விருத்திக்கேற்ப ஏழாவது நிரையில் இருக்க வேண்டிய சவர்க்காரங்களின் எண்ணிக்கை யாது? iii. சவர்க்கார அடுக்கில் மேலேயுள்ள நிரையில் ஒரு சவர்க்காரம் மாத்திரம் இருந்தால், அடுக்கில் உள்ள நிரைகளின் எண்ணிக்கையைக் காண்க. iv. ஏந்தானத்தில் இத்தகைய ஐந்து அடுக்குகள் இருப்பின், “அதில் உள்ள சவர்க்காரங்களின் மொத்த எண்ணிக்கை 720 இற்கு மேற்படுவதில்லை” என்னும் கூற்றின் உண்மை அல்லது பொய் பற்றி விமர்சிக்க.
21.	உருவில் காட்டப்படுவது ஒரு சதுர வடிவத் தழுவணை உறையின் ஒரு பகுதியாகும். இதன் ஒரு பக்கத்தின் நீளம் 3 cm, 4 cm, 5 cm என்றவாறு படிப்படியாக அதிகரிக்குமாறு சதுரங்களைக் கொண்ட ஒரு கோலம் வரையப்பட்டுள்ளது. இச்சதுரங்கள் ஒவ்வொன்றையும் சுற்றி இறேந்தைகளைப் பொருத்துவதற்குக் கீதா உத்தேசித்துள்ளார். i. மிகச் சிறிய சதுரத்தில் பொருத்துவதற்குத் தேவையான இறேந்தையின் அளவு 12 cm எனக் கொண்டு முதல் மூன்று சதுரங்களிலும் பொருத்துவதற்குத் தேவையான இறேந்தையின் அளவுகளை முறையே எழுதுக. ii. மேற்குறித்தவாறு 8 ஆவது சதுரத்தைச் சுற்றிப் பொருத்துவதற்குத் தேவையான இறேந்தைப் பகுதியின் நீளத்தைக் காண்க.

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

iii. எத்தனையாவது சதுரத்தைச் சுற்றி இறேந்தையைப் பொருத்துவதற்கு 56 cm நீளமான இறேந்தை எத்தனையாவதாக இருக்கும்?

iv. இத்தழுவணை உறையின் 18 ஆவது சதுரம் மிகப் பெரிய சதுரம் ஆகும். எல்லாச் சதுரங்களிலும் இவ்வாறு இறேந்தையைப் பொருத்துவதற்கு 8.5 m இறேந்தை போதியதெனக் கீதா கூறுகின்றார். நீர் இக்கூற்றுடன் இணங்குகின்றீராவெனக் காரணங்களுடன் விளக்குக.



22. ஒரு குறித்த தொலைக்காட்சி அலைவரிசையில் நடைபெறும் "அதிட்டசாலி" என்னும் நிகழ்ச்சியில் பங்குபற்றும் ஒவ்வொரு போட்டியாளரும் 15 வினாக்களுக்குச் சரியாக விடையளிப்பதன் மூலம் அதில் வெற்றிபெறலாம். சரியாக விடையளிக்கும்போது முதல் வினாவுக்கு ரூ. 50 , இரண்டாம் வினாவுக்கு ரூ. 75, மூன்றாம் வினாவுக்கு ரூ. 100 என்றவாறு கிடைக்கும் பரிசுப் பணம் ஒரு கூட்டல் விருத்தியில் இருக்குமெனின்,

i. 12 ஆம் வினாவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பரிசுப் பணத்தைக் காண்க.

ii. அடுத்துவரும் 2 வினாக்களுக்கு ரூ. 425 பரிசுப்பணமாக ஒதுக்கப்பட்டிருக்குமெனின், அவ்வினாக்களின் எண்கள் யாவை?

iii. போட்டியாளர் ஒரு வினாவுக்குப் பிழையான விடையை அளிக்கும்போது போட்டியிலிருந்து விலக நேரிடும் அதே வேளை அப்போது அவருக்குரிய பரிசுப் பணம் அதுவரைக்கும் அவர் பெற்ற பணத்தில் அரைவாசியாகும். ஒரு போட்டியாளர் ஒரு குறித்த வினாவுக்குச் சரியாக விடையளிக்காமையால் ரூ. 1300 பரிசுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு போட்டியிலிருந்து விலக நேரிட்டால், அவருக்குக் கிடைத்த வினாக்களின் எண்ணிக்கை 14 எனக் காட்டுக.

களியாட்டம் நடைபெறும் ஓர் இடத்தில் ஒளியூட்டுவதற்கு இரும்புக் குழாய்கள் உள்ள சட்டங்கள் சிலவற்றைப் பயன்படுத்திச் சிறிய மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன. மின்குமிழ்கள் ஒவ்வொரு சட்டத்தின் முதற் குழாயில் 84, இரண்டாம் குழாயில் 78, மூன்றாம் குழாயில் 72 என்றவாறு ஒரு கோலத்தில் குறைந்து சென்று இறுதிக் குழாயில் 6 ஆக இருக்கின்றன.

i. ஒரு சட்டத்தில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்ட எத்தனை குழாய்கள் உள்ளன?

ii. களியாட்டம் நடைபெறும் இடத்தில் மேற்குறித்தவாறு 10 சட்டங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அதற்காக 315 சிறிய மின்குமிழ்கள் வீதம் உள்ள 20 பெட்டிகள் போதுமானவையா? உமது விடைக்குக் காரணங்களைக் காட்டுக.

iii. ஒவ்வொரு சட்டத்திலும் ஒவ்வொரு இரு குழாய்களுக்கும் நடுவே இருக்குமாறு மின்குமிழ்களை இடுவதற்கு வேறொரு குழாய் வீதம் இட உத்தேசிக்கப்பட்டிருந்தது. முதற் குழாயிலும் இறுதிக் குழாயிலும் உள்ள மின்குமிழ்களின் எண்ணிக்கை மாறாமலும் முறையே குழாய்களில் உள்ள மின்குமிழ்களின் எண்ணிக்கைகள் ஒரு கூட்டல் விருத்தியில் இருக்குமாறு குறைந்தும் இருப்பின், இரு அடுத்துள்ள குழாய்களில் இருக்கும் மின்குமிழ்களின் எண்ணிக்கைகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தைக் காரணங்களுடன் குறிப்பிடுக.

www.lkedu.lk

23.	நேராக அடுக்கப்பட்ட 11 போத்தல்களில் மாணவன் ஒருவன் 1ஆம், 2ஆம், 3ஆம் போத்தல்களில் 30, 27, 24 என்ற எண்ணிக்கையான மாபிள்களைப் போடுகின்றான். இதே ஒழுங்கில் ஏனைய போத்தல்களிலும் மாபிள்களைப் போடுகின்றான். i. 4ஆம், 5ஆம் போத்தல்களில் இட்ட மாபிள்களின் எண்ணிக்கையைத் தனித்தனியே காண்க. ii. n ஆம் போத்தலில் இட்ட மாபிள்களின் எண்ணிக்கையைக் காண்க. iii. 8 போத்தல்களிலும் இட்ட மொத்த மாபிள்களின் எண்ணிக்கையைக் காண்க. iv. 165 மாபிள்கள் மாணவனிடம் இருக்குமாயின் அவன் 11ஆவது போத்தலில் இடுவதற்கு இம்மாபிள்கள் போதும் எனக் காட்டுக.
24.	2019ம் ஆண்டு இறப்பர் பயிர்ச் செய்கை செய்வோர்க்கு பங்கிடுவதற்காக ஒரு தொகைப் பசளைப் பொதிகள் நிரைக ளாக பிரதேச களஞ்சியசாலையில் அடுக்கப்பட்டிருந்தன. அங்கு அடியில் 150 பசளைப் பொதிகளும், அதற்கு மேல் 146ம், அதற்கும் மேல் 142 ம் என்ற கோலத்தில் அடுக்கப்பட்டிருந்தன. அங்கு 20 நிரைகள் காணப்பட்டன. ஒரு பசளைப் பொதியின் திணிவு 50kg எனின் களஞ்சியப்படுத்தப்பட்ட பசளைப் பொதிகளின் மொத்த திணிவு 100 டொன்களிலும் அதிகம் எனக் காட்டுக.
25.	மாணவனொருவன் புத்தகமொன்றை கொள்வனவு செய்யும் நோக்கில் முதல் நாள் ரூ. 5 இரண்டாம் நாள் ரூ. 7 மூன்றாம் நாள் ரூ. 9 எனும் ஒழுங்கில் பணம் சேமிக்கிறார். இவ்வாறு தொடர்ச்சியாக 16 நாட்களுக்கு பணம் சேமிக்கின்றார். i. இவ்வெண்தொடர் எவ்வகை விருத்தியில் அமைந்துள்ளது? ii. 16ம் நாள் சேமித்த பணத்தொகை யாது? iii. 16 நாட்களில் சேமித்த மொத்த பணத்தொகை யாது? iv. இம்மாணவன் கொள்வனவு செய்யவுள்ள புத்தகத்தின் பெறுமதி ரூ. 480 எனின், மேலும் எத்தனை நாட்களுக்கு தொடர்ச்சியாக பணம் சேமிக்க வேண்டுமெனக் காண்க.

26. எண்பரம்பல்

1.	தரப்பட்டுள்ள எண்பரம்பலில் இலக்கம் 9 எவ்வாறு அழைக்கப்படும். 2, 2, 3, 4, 7, 7, 7, 9, 9, 9, 9, 10
2.	இடையம் யாது? 14, 27, 42, 47, 56, 65, 73
3.	இடையம் யாது? 8 , 10 , 11 , 13 , 15, 16
4.	3, 5, x, 7, 9, 10 எனும் பரம்பலின் இடை 6 எனின் x இன் பெறுமானம் யாது?
5.	5 மாணவர்களின் இடை நிறை 35 kg எனின் ஐவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை யாது?

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom

A/L - 2027



தமிழ்

(மாதம் 1500/-)

புதன்: 9-10PM

வியாழன்: 9-10PM

ஞாயிறு: 9-10PM

ரி.காயத்திரி

ICT

தமிழ் மீடியம்
&
English Medium

(மாதம் 1500/-)

Monday: 7-8.30PM

Wednesday: 7-8.30PM

S.Murali

COMMERCIAL BANK

Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295

BOC
BANKERS TO THE NATION

S.Kishokumar
Nelliyaddy Branch
86479603

PEOPLE'S BANK

S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670

eZ Cash

0766674945

6.	3 மாணவர்களின் இடை நிறை 42kg ஆகும். அவர்களுடன் 46kg நிறையுள்ள மாணவனொருவன் இணைந்து கொண்டால் 4 பேரினதும் மொத்த நிறை யாது?
7.	தேயிலை தொழிற்சாலை ஒன்றில் 3 தொழிலாளர்களினால் பறிக்கப்பட்ட தேயிலையின் இடைநிறை 32kg ஆகும். இன்னும் இரு தொழிலாளர்கள் முறையே 19kg, 40kg தேயிலை பறித்தால் ஐவரினதும் இடைநிறை யாது?
8.	i. Q_1 ஆனது 5 ஆயின் Q_3 யாது? ii. காலணை இடைவீச்சு யாது? 3, 3, 5, 6, 8, 9, 12, 14, 19, 20, 24 (Q_1 = 5)
9.	கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பலொன்றில் $\Sigma f = 50$, $\Sigma fx = 270$ ஆயின் இடை யாது?
10.	கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பலொன்றில் உத்தேச இடை 47.5 உம் விலகல் இடை 2.3 உம் ஆயின் உண்மை இடை யாது?
11	கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பலொன்றில் $A = 35$, $\Sigma f = 20$, $\Sigma fd = -60$ ஆயின் இடை யாது?
12.	6 - 10, 11 - 15, 16 - 20 வகுப்பாயிடைகளைக் கொண்ட எண் பரம்பலொன்றின் 11 - 15 வகுப்பாயிடையின் கீழ் வரையையும், மேல் வரையையும் எழுதுக.
13.	கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை பூரணப்படுத்துக. **நடுப்பெறுமானம்** | **விலகல்** 25 | -20 35 | …… 45 | 0 55 | ……
14.	கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை பூரணப்படுத்துக. **வகுப்பாயிடை** | **மீடிறன்** | **நடுப்பெறுமானம்** | ***fx*** 10 – 20 | 2 | 15 | …… 20 - 30 | 5 | …… | 125
15.	இம்முறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவனொருவன் 30 நாட்களைக் கொண்ட குறித்த ஒரு மாதத்தில் இரவு நேரத்தில் தனது கற்றல் செயற்பாடுகளுக்காக செலவழித்த நேரம் நிமிடத்தில் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது. செலவழித்த நேரம் (நிமிடத்தில்) | 30-60 | 60-90 | 90-120 | 120-150 | 150-180 | 180-210 நாட்களின் எண்ணிக்கை | 2 | 4 | 5 | 8 | 7 | 4 i. மேற்குறித்த பரம்பலின் ஆகார வகுப்பு யாது? ii. ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு அல்லது வேறு விதமாக அம்மாணவன் ஒரு நாளையில் கற்றல் செயற்பாடுகளுக்காக செலவழித்த இடை நேரத்தைக் காண்க.

H.D.Fasmin B.Sc (Hons)

www.lkedu.lk

iii. 180 நாட்களில் இம்மாணவன் கற்றலுக்காக செலவழித்த நேரத்தை மணித்தியாலத்தில் காண்க.

16. துணி விற்பனை செய்யும் ஒருவர் குறித்த ஒரு மாதத்தின் 30 நாட்களில் விற்பனை செய்த துணியின் நீளங்கள் பற்றிய தரவுகள் கீழே அட்டவணையில் உள்ளது.

துணியின் நீளம் (மீற்றரில்)	30-40	40-50	50-60	60-70	70-80	80-90	90-100
நாட்களின் எண்ணிக்கை	3	4	6	7	5	3	2

i. இப்பரம்பலின் ஆகார வகுப்பைக் காண்க.
ii. ஓர் உகந்த எடுகொண்ட இடையைப் பயன்படுத்தி அல்லது வேறு விதமாக, ஒரு நாளில் விற்பனை செய்த துணியின் இடை நீளத்தைக் காண்க.
iii. 20 நாட்களில் விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படும் துணியின் நீளத்தைக் காண்க.
iv. அவர் 20 நாட்களில் விற்பனை செய்த மொத்த துணியின் அளவில் பகுதி சீத்தை துணியாயின் அவர் விற்பனை செய்த மொத்தத் துணியின் அளவை மீற்றரில் காண்க.

17. ஒரு குறித்த மாதமொன்றில் வாழைப்பழ வியாபாரி ஒருவர் விற்பனை செய்த வாழைப் பழங்களின் நிறைகள் பற்றிய தரவுகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

திணிவு (கிலோ கிராம்)	20-30	30-40	40-50	50-60	60-70	70-80
நாட்களின் எண்ணிக்கை	1	5	8	7	6	3

i. இப்பரம்பலின் ஆகார வகுப்பைக் காண்க.
ii. ஓர் உகந்த எடுகொண்ட இடையைப் பயன்படுத்தி அல்லது வேறு விதமாக, ஒரு நாளில் விற்பனை செய்த வாழைப்பழங்களின் இடைத் திணிவைக் காண்க.
iii. 7 நாட்களில் விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படும் வாழைப்பழங்களின் திணிவைக்காண்க.
iv. இப்பழங்களில் புளிவாழை, சீனிவாழை ஆகியவற்றிற்கிடையிலான விகிதம் 2:5 ஆகவும் புளிவாழை 1kg இன் விலை ரூபா 180உம் சீனி வாழை 1kg இன் விலை ரூபா 90 உம் ஆயின் மேற்படி 7 நாட்களில் வாழைப்பழ விற்பனையால் கிடைக்கும் வருமானத்தைக் காண்க.

18. 40 வீடுகளைக் கொண்ட வீட்டுத்தொகுதியொன்றிலுள்ள வீடுகளில் குறித்த மாதமொன்றில் பயன்படுத்திய நீர் அலகுகளிற்கான கட்டணங்கள் பற்றிய விபரம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

நீர்க்கட்டணம்	50 -100	100-150	150-200	200-250	250-300	300-350
வீடுகளின் எண்ணிக்கை	3	6	9	10	8	4

i. ஆகார வகுப்பு யாது?
ii. ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக்கொண்டு அல்லது வேறு முறையில் வீடொன்றிற்கான மாத நீர்க்கட்டணத்தைக் காண்க.
iii. தொகுதியில் உள்ள வீடுகளினால் 6 மாதங்களில் நீர்க்கட்டணங்களால் கிடைக்கும் வருமானம் ரூபா 50,000 இலும் குறைவு எனக் காட்டுக.

19. பால் சேகரிப்பு நிலையம் ஒன்றில் 40 பன்னையாளர்களிடமிருந்து 15 நாட்களில் சேகரித்த பாலின் அளவுகள் லீற்றரில் பற்றிய கீழே அட்டவணையில் உள்ளது.

பாலின் அளவு (லீற்றரில்)	35-45	45-55	55-65	65-75	75-85	85-95
பன்னையாளர்களின் எண்ணிக்கை	4	5	6	10	9	6

i. இப்பரம்பலின் ஆகார வகுப்பைக் காண்க.
ii. ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு, 15 நாட்களில் ஒரு பன்னையாளரிடமிருந்து சேகரித்த பாலின் அளவைக் காண்க.

www.lkedu.lk
H.D.Fasmin B.Sc (Hons)

iii. 30 நாட்களைக் கொண்ட மாதமொன்றில் இந்நிலையத்தில் சேகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் பாலின் அளவைக் காண்க.

iv. ஒரு லீற்றர் பாலிற்கு ரூபா 70 வீதம் பன்னையாளர்களுக்கு வழங்கப்படுமாயின் ஒரு மாதத்தில் இப்பன்னையாளர்களுக்கு வழங்குவதற்கு தேவையான பணத்தைக் காண்க.

20. ஒரு குறித்த பேக்கரியில் 40 நாட்களில் சந்தைப்படுத்தப்பட்ட பாணின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் அட்டவணையில் காணப்படுகின்றன.

பாணின் எண்ணிக்கை	100 - 120	120 - 140	140 - 160	160 - 180	180 - 200	200 - 220
நாட்களின் எண்ணிக்கை	3	7	10	12	6	2

i. இப்பரம்பலின் ஆகார வகுப்பு யாது?

ii. ஒரு நாளில் சந்தைப்படுத்தப்பட்ட பாண்களின் இடை எண்ணிக்கையைக் காண்க.

iii. ஒரு பாணின் விலை ரூ 50 எனின், பாணைச் சந்தைப்படுத்துவதால் நவம்பர் மாதத்தில் பேக்கரிக்கு கிடைக்கும் வருமானத்தைக் காண்க.

